# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.19/2022 நாள் : 27.05.2022

## நெம்மேலியில் நாளொன்றுக்கு 150 மில்லியன் கன லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணிகளை நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஆய்வு செய்தார்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.05.2022) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் கிழக்கு கடற்கரை சாலை, நெம்மேலியில் செயல்பட்டு வரும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்தின் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்.

நெம்மேலி சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை, விநியோகம் செய்ய பல்லாவரம் வரை 40 கிலோமீட்டர் நீளத்திற்கு 1400/1200 மில்லிமீட்டர் விட்டமுள்ள குழாய் பதிக்கும் பணிகளை முட்டுக்காடு படகு குழாம் அருகில் ஆய்வு செய்தார். கூடுதலாக கட்டுமானப் பணியாளர்கள் மற்றும் தேவையான இயந்திரங்களை உடனடியாக கொண்டுவந்து, நிலைய கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்தி, திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டுமென அலுவலர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் அறிவுறுத்தினார்.

இந்நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்படும் குடிநீர், மேடவாக்கம், வேளச்சேரி, ஆலந்தூர், பரங்கிமலை, கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்கட்டளை, சோழிங்கநல்லூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், மடிப்பாக்கம் மற்றும் சிறுசேரி பகுதியில் உள்ள சுமார் 9 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

இந்த ஆய்வின்போது, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய முதன்மை செயலாளர்/மேலாண்மை இயக்குநர் திரு.சா.விஜயராஜ் குமார், இ.ஆ.ப. அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப. அவர்கள், பொறியியல் இயக்குநர், தலைமைப் பொறியாளர் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னை குடிநீர் வாரியம்